# THE WINGS

Bulletin From

**Tamilnadu Recognised**
**Nursing Schools and Colleges Association**

June 2011 - March 2012
இதழ் - 5

## வணங்குகிறோம் அம்மா !

அன்பார்ந்த தமிழ்நாடு அரசு அங்கீகாரம் பெற்ற நர்சிங் கல்லூரி மற்றும் பள்ளிகளின் அசோசியேசன் உறுப்பினர்கள் அனைவருக்கும் மனமார்ந்த வணக்கங்கள்.

நமது சங்கத்தின் தொய்வில்லாத முயற்சியின் காரணமாக, நமது தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சி தலைவி டாக்டர் அம்மா அவர்கள், வரலாற்று சாதனையாக தனியார் நர்சிங் கல்லூரி மற்றும் பள்ளியில் பயிலும் மாணவ / மாணவிகளுக்கு அரசு வேலை வாய்ப்பு வழங்கி 1,50,000 திற்கும் மேற்பட்ட செவிலியர்களின் குடும்பங்களில் மகிழ்ச்சி பொங்க வழி வகுத்துள்ளார்கள்.

தனியார் கல்லூரிகளில் படித்த செவிலியர்களின் வாழ்வில் மறுமலர்ச்சியை ஏற்படுத்திய நமது தமிழக முதல்வர் அவர்களுக்கு நமது நெஞ்சார்ந்த நன்றியினை சமர்ப்பிக்கின்றோம்.

(R.விவேகானந்தன்)
தலைவர்



**R.விவேகானந்தன்**
தலைவர்



**A.குணசிங்**
செயலர்



**N.யோகானந்தசிவம்**
பொருளாளர்



**S.சிதம்பரம்**
எடிட்டர்



தர்மத்திற்கு எதிரானதாகவும், இயற்கைக்கு முரணாகவும் இருந்த நிலைமையை மாற்றி அரசு அங்கீகாரம் பெற்ற தனியார் நர்சிங் கல்லூரி மற்றும் பள்ளிகளில் பயின்ற மாணவ / மாணவிகளுக்கும் அரசு வேலைவாய்ப்பினை வழங்கி செவிலியர்களின் வாழ்வில் வசந்தத்தை ஏற்படுத்திய தமிழக முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களுக்கு

நன்றியினை சமர்ப்பிக்கின்றோம்.

இங்ஙனம்,

தமிழ்நாடு அரசு அங்கீகாரம் பெற்ற தனியார் நர்சிங் கல்லூரி மற்றும் பள்ளிகளின் சங்கம்.

## தனியார் நர்சிங் பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவிகளுக்கு அரசு வேலைவாய்ப்பு வழுங்க பரிந்துரை செய்த மாண்புமிகு தமிழக மக்கள் மற்றும் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர். S. விஜய் அவர்களுக்கு தமிழக அரசு அங்கீகாரம் பெற்ற நர்சிங் கல்லூரி அசோசியேசனின் சார்பாக தலைவர் திரு. R. விவேகானந்தன் அவர்கள் பொன்னாடை போர்த்தி நன்றியினை தெரிவித்தார்



# தொடரும் முயற்சிகள் ! வெற்றி நிச்சயம் !

தனியார் நர்சிங் பள்ளிகளில் பயின்ற மாணவ / மாணவிகளுக்கு அரசு வேலைவாய்ப்பு வழங்கி தமிழக அரசு உத்தரவிட்ட அரசு ஆணை எண்: (MS) No.29 Dt:18.01.2012 யினை தடை செய்யக்கோரி அரசு நர்சிங் கல்லூரி மற்றும் பள்ளியில் பயின்று கொண்டு இருக்கின்ற மாணவர்களின் சார்பாக சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு, நீதியரசர். சந்துரு அவர்கள் தமிழக அரசின் அரசு ஆணைக்கு இடைக்கால தடை வழங்கியுள்ளார்.

இந்த தடை உத்திரவினை நீக்க நமது சங்கம் தொடர்ந்து முயற்சி செய்து கொண்டு இருக்கிறது.

**வெற்றி நிச்சயம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம்.**

## நமது சங்கத்தின் தொடர் முயற்சியால் தமிழக அரசு அரசாங்க வேலைவாய்ப்பு வழங்க வெளியிட்ட அரசு ஆணை

## ABSTRACT

Nursing Establishment - Appointment of Nurses in Government Medical Institutions by Nurses studied in Government and Government approved Private Nursing Institutions – Orders – Issued.

---

HEALTH AND FAMILY WELFARE (C1) DEPARTMENT

G.O.(Ms)No. 29

Dated: 18.01.2012
Thiruvalluvar Andu-2043,
Thai-4

Read:-

1. From Director of Medical and Rural Health Services, letter reference No.410141 / N1 / 2 / 2010, dated 14.06.2010.
2. The Hon'ble Madurai Bench of Madras High Court, Madurai order dated 31.03.2011 in W.A. (MD) No.118 of 2011.
3. The Hon'ble Madurai Bench of Madras High Court, Madurai order dated 23.06.2011 in W.P. (MD) No.5880 of 2010.
4. The Hon'ble Madurai Bench of Madras High Court, Madurai order dated 23.09.2011 in Review application (MD) Nos. 37, 79 and 31 of 2011.
5. The Hon'ble Supreme Court of India order dated 17.11.2011 in SLP (Civil) CC No.19282-19284 of 2011.

--:o0o:–

**ORDER:**

At present only Nursing candidates who have studied in Government Nursing Schools / Colleges are being appointed to the post of Nurses in Government Medical Institutions. Now, more number of Private Nursing Colleges and Schools have been started with Government recognition and the Nursing Students of these Government recognised Private Institutions are also appearing for the examination conducted by the Director of Medical Education along with the students of Government institutions and Diploma certificates to both categories are awarded. However, the Nursing candidates studied in the approved Private Nursing Institutions are not given appointment in the Government Hospitals / Medical Institutions. The Government is receiving a constant stream of petitions with a request to give appointment in Government Medical institutions to the Nursing candidates who have studied in Private Nursing Schools / Colleges.

2. In the year 2005, few candidates who studied in Private Nursing Institutions, filed Writ Petition Nos. 36932 and 39236 of 2005 and W.P.M.P.Nos.39577 and 42031 of 2005, before the Hon'ble High Court of Madras to consider them for appointment as Staff Nurse in Government Hospitals and Primary Health Centres without any discrimination between candidates studied in the Government Institutions and those candidates studied in Government recognised Private Institutions. The Hon'ble High Court in its order dated: 27.04.2006 in the said Writ Petitions has ordered that the Petitioners (Private Nursing School Students) are entitled to be treated on par with the candidates who underwent Nursing course in Government Nursing schools.

3. Then the Government and students who studied in the Government Nursing Schools preferred Writ Appeals against the above order of the learned Single Judge. In the said appeals reported in (2007) 3 MLJ 967 (M.Elumalai and others Vs.M.Bhuvaneswari and others) the Division Bench of the Hon'ble High Court of Madras, allowed the Writ Appeals on 27.04.2007 and set aside the order of the learned Single Judge.

4. In W.P.(MD) No.12971 of 2009, certain Private Nurses challenged the present practice of recruiting Nurses from Government Nursing Institutions. The High Court in its order dated 25.10.2010 dismissed the above Writ Petition. The Tamil Nadu recognized Private Nursing Schools and Colleges Association has also filed a WP.(MD) No.5880/2010 before the High Court of Madras challenging the present practice of recruitment of Nurses in Government from among the candidates trained in Government Nursing Institutions alone.

5. The Private Nurses Association has filed a W.A.(MD)No.118 of 2011 and W.A.(MD) No.1194 of 2011 against the order of the single judge dated 25.10.2010 in W.P.(MD) No.12971 of 2009. In the said Writ Appeal, and Writ Petition the Hon'ble Madurai Bench of Madras High Court in its common order dated 31.03.2011, among others, has passed the following orders:-

> ***"...the respondents are directed to consider the case of the students who have come out successfully in the Nursing Course from Private Institutions, along with the students of the Government Institutions, for appointment to the post of Nurses in Government Hospitals in future vacancies. The order of the learned single judge passed in W.P.No.12971/2010, dated 25.10.2010, for the reasons discussed above, is set aside. Since there is no bar in the rule with regard to the appointment, as far as the challenge with regard to the rule is concerned, we are not inclined to grant such relief".***

6. The Hon'ble High Court in its final order dated 23.06.2011 in WP (MD) No.5880/2010 filed by the Tamil Nadu recognized Private Nursing Schools and Colleges Association has quoted the judgement pronounced in W.A.(MD) No.118 of 2011 and W.P. (MD) No.1194 of 2011 and has directed the Government to consider the case of the students, who have come out successfully in the Nursing Course from

private institutions, along with the students of the Government Institutions, for appointment to the post of Nurses in Government Hospitals in future vacancies.

7. Against the orders in W.P.(MD)No.11940/2011 and W.A.(MD) No.118 of 2011 and W.P.(MD) No.5880 of 2010, Tmt.K.Backiya Lakshmi and 4 others, the Nurses who studied in Government Medical Institutions filed Review Application Nos.37, 79 and 31 of 2011. In the Review Applications, the Madurai Bench of Madras High Court, Madurai has passed the following order on 23.09.2011:-

*"…. These are all the issues which ought to have been settled in the presence of both the parties. In the absence of such vital issue having been answered by the Division Bench we allow the review petitions and the judgments of the Division Bench stands set aside and the matter is again directed to be posted before the Division Bench with a direction to the respondents to take necessary steps to serve on the persons who have undergone training through Government institutions in a representative capacity by effecting publications and thereafter, the appeals as well as the writ petitions are directed to be heard in a full fledged form by the Division Bench. Accordingly, the review petitions are ordered".*

8. The Private Nurses against the order made in the above Review Applications have filed a Special Leave Petition (SLP), before Hon'ble Supreme Court of India and the Hon'ble Supreme Court of India in SLP (Civil) CC Nos.19282-19284 of 2011, dated 17.11.2011 has passed the following orders:-

" Taken on Board.
Permission to file the Special Leave Petitions is granted.
Issue notice.
In the meantime, the operation of the impugned judgment shall remain stayed."

9. The Government have examined the proposal of the Director of Medical and Rural Health Services, the representations received from Nurses who studied in Private Nursing Institutions and the various court cases in detail. As per the present rule position, the Nurses trained in Government approved Nursing Institutions having the age and other qualifications prescribed in the rules are also eligible for appointment for the post of Nurses in Government Medical Institutions. Further, the present process of recruitment of Nurses trained in Government Nursing Institutions alone will run contrary to Article 16 (1) of the Constitution.

10. Hence the Government have decided that in future, all vacant posts of Nurses in all Government Medical Institutions shall be filled up from among the trained Nurses both in the Government Institutions and Government approved Private Nursing Institutions by conducting an examination by Medical Services Recruitment Board constituted vide G.O.(Ms).No.1, Health and Family Welfare (C2) Department, dated 02.01.2012 duly following the rule of reservation and orders accordingly.

11. This order is issued subject to the outcome of the Special Leave Petition (Civil) CC Nos.19282-19284 of 2011, dated 17.11.2011 and if the Special Leave Petition is dismissed as withdrawn, then the decision of the Government would be subject to the final decision of the Division Bench as per the orders passed in the said Review Application.

(BY ORDER OF THE GOVERNOR)

GIRIJA VAIDYANATHAN,
PRINCIPAL SECRETARY TO GOVERNMENT

To

All Heads of Departments
All Deans/Medical Superintendent
of all Medical Colleges/Hospitals.
All Joint Director/Deputy Director under the Health and Family Welfare Department.
All District Collectors.
The Tamil Nadu Public Service Commission, Chennai-8.
The Accountant General, Chennai-18/35.
The Pay and Accounts Officer (North / East / South), Chennai-1/5/35.
The Resident Audit Officer (Sectt), Office of the Principal Accountant
General, (Tamil Nadu & Pondicherry), 2nd Floor, Namakkal
Kavignar Maligai, Secretariat, Chennai-9.
The Works Manager, Government Central Press, Chennai-79.
(2 copies - for publication in the next Government Gazette issue).

Copy to:-
The Secretary – I to Hon'ble Chief Minister, Chennai-9.
The Special P.A to Hon'ble Minister (Health),Chennai-9
All Departments of Secretariat, Chennai-9.
All Officers, Health and Family Welfare Department, Chennai-9.
All Sections in Health and Family Welfare Department, Chennai-9.
The Private Secretary to Principal Secretary to Government,
Health and Family Welfare Department, Chennai – 9.
The National Informatics Centre, Chennai-9.
Stock File / Spare Copy.

// FORWARDED BY ORDER//

SECTION OFFICER

# செய்தித்தாள்களில் வெளியான நமது சங்கத்தின் சாதனைகள்

· FRIDAY, JUNE 24, 2011 ·

**THE HINDU**

INDIA'S NATIONAL NEWSPAPER SINCE 1878

## Consider private nursing graduates for appointment, says High Court

Staff Reporter

**MADURAI:** The Madras High Court Bench here on Thursday directed the State Government represented by its Health and Family Welfare Secretary to consider candidates who passed out of private nursing colleges on par with those who had studied in government institutions while appointing nurses for government hospitals.

A Division Bench of Justices K. Suguna and A. Arumughaswamy gave the direction while disposing of a writ appeal filed by the Tamil Nadu Recognised Private Nursing Schools and Colleges Association represented by its president R. Vivekanandan. The appeal had been transferred to the Madurai Bench from the Principal Seat of the High Court in Chennai.

The judges said that the orders passed by them on March 31 in another writ appeal, filed by an association of nurses who studied in private institutions, would apply to the present case too. In that case, it was held that denying appointment to nurses who studied in private institutions amounted to violation of Article 14 (Equality before law) of the Constitution.

The Bench also said that the government could not refuse to appoint candidates from private colleges which were actually established on the basis of No-Objection Certificates issued by it and the recognition granted by Indian Nursing Council under the Nursing Council Act. Further, there was no prohibition under the rules to exclude those candidates from joining government service.

Writing the judgement, Ms. Justice Suguna disagreed with a Special Government Pleader's contention that gaining admission in a nursing course in a government college itself meant that the candidate had been appointed in government service as those candidates were paid stipend, trained and asked to sign a bond to serve the government hospitals for at least three years after completing their course.

"The Nursing Council Act came in to force in 1947. At the relevant point of time, there might have been scarcity of nurses and because of that, the Government might have started giving stipend and other benefits and also assurance to take them in government service on their executing a bond. But the position is totally different now.

"When this procedure is not followed in any other courses, including MBBS, we are unable to understand why this total exclusion in the case of students of private nursing institutions alone. Till the completion of the course, one has to be treated as a student. Only after completion of the course, can a claim of a candidate can be considered for appointment and not based on the admission to the course itself," the judge said.

அங்கீகாரம் பெற்ற

## தனியார் நர்சிங் பள்ளிகளில் படித்தவர்களுக்கு வேலைவாய்ப்பு

### தமிழக அரசு உத்தரவு



➡ அரசு அங்கீகாரம் பெற்ற நர்சிங் பயிற்சி பள்ளியில் படித்து வெற்றிகரமாக பயிற்சியை முடித்தவராக இருக்க வேண்டும்.

➡ அரசு மருத்துவ நிறுவனங்களில் பணி வாய்ப்புக்கு சேருவதற்கான வயது வரம்புகள், கல்வித் தகுதிகள், இதர தகுதிகள் கொண்டவராக இருக்க வேண்டும்.

சென்னை, பிப்.17: தமிழக அரசு நேற்று பிறப்பித்த உத்தரவில் கூறியிருப்பதாவது:

அரசு மருத்துவமனைகள் மற்றும் மருத்துவ நிறுவனங்களில் இதுவரை அரசு நர்சிங் பயிற்சி பள்ளிகளில் படித்தவர்களுக்கு மட்டுமே வேலைவாய்ப்பு வழங்கப்பட்டது. தனியார் தரப்பில் ஏராளமான நர்சிங் பயிற்சி பள்ளிகள் திறக்கப்பட்டு, மாணவ மாணவிகள் பயிற்சி முடித்தனர். மருத்துவக்கல்வி இயக்குனரகம் நடத்தும் தேர்வை எழுதி தேர்ச்சி பெற்றுள்ளனர். ஆனால், அவர்களுக்கு அரசு சார்ந்த மருத்துவ நிறுவனங்களில் பணி வாய்ப்புகள் வழங்கப்படவில்லை.

இதுகுறித்து, தனியார் நர்சிங் பள்ளிகள் மற்றும் மாணவர்கள், தனியார் நர்சிங் பள்ளி சங்கங்கள் சார்பில் வழக்குகள் தொடரப்பட்டன.

தனியாரில் படித்திருந்தாலும் பயிற்சியை வெற்றிகரமாக முடித்திருப்பவர்களுக்கு, அரசுத் துறையில் எதிர்காலங்களில் ஏற்படும் பணியிடங்களில் வாய்ப்பளிக்கலாம் என்று கோர்ட் தெரிவித்த கருத்தை ஏற்று, தனியாரில் படித்தவர்களுக்கு பணி வாய்ப்பு வழங்கப்படும்.

இதற்கு கீழ்கண்ட தகுதிகள் இருக்க வேண்டும்.

* அரசு அங்கீகாரம் பெற்ற நர்சிங் பயிற்சி பள்ளியில் படித்து வெற்றிகரமாக பயிற்சியை முடித்தவராக இருக்க வேண்டும்.
* அரசு மருத்துவ நிறுவனங்களில் பணி வாய்ப்புக்கு சேருவதற்கான வயது வரம்புகள், கல்வித் தகுதிகள், இதர தகுதிகள் கொண்டவராக இருக்க வேண்டும்.
* அரசுப் பள்ளி அல்லது அரசு அங்கீகாரம் பெற்ற தனியார் பள்ளியில் படித்த இரு தரப்பினரும் மருத்துவ சேவைகள் பணியாளர் தேர்வு வாரியம் நடத்தும் தேர்வை எழுத வேண்டும். தேர்வு முடிவுகளின் அடிப்படையில் பணி வாய்ப்புகள் அமையும்.
* இந்த விஷயத்தில் கோர்ட்டின் இறுதி தீர்ப்பே இறுதியானது.

இவ்வாறு தமிழக அரசு பிறப்பித்த உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**தினத்தந்தி** DAILY THANTHI

திருச்சி (21-1-2012) சனிக்கிழமை | மலர் 70 இதழ் 81 | வெல்க தமிழ்

மருத்துவ தேர்வு வாரியம் மூலம் பணி நியமனம்:

## தனியார் நர்சிங் கல்லூரிகளில் படித்தவர்களுக்கும் அரசு வேலை

### தமிழக அரசு உத்தரவு

சென்னை, ஜன.21-

தனியார் நர்சிங் கல்லூரிகளில் படித்தவர்களுக்கும் அரசு மருத்துவமனைகளில் நர்சு வேலை வழங்க தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பாக தமிழக அரசின் சுகாதாரத்துறை முதன்மைச் செயலாளர் வி.கு. வைத்தியநாதன் வெளியிட்டுள்ள அரசாணையில் கூறப்பட்டு இருப்பதாவது—

**முரண்பாடு**

தற்போது அரசு நர்சிங் கல்லூரிகள் மற்றும் அரசு நர்சிங் பள்ளிகளில் படித்தவர்கள் மட்டுமே அரசு மருத்துவமனைகளிலும் அரசு மருத்துவ நிறுவனங்களிலும் நர்சு பணியில் நியமிக்கப்பட்டு வருகின்றனர். அரசு அங்கீகாரம் பெற்ற தனியார் நர்சிங் கல்லூரிகளிலும், நர்சிங் பள்ளிகளிலும் படிக்கும் மாணவ-மாணவிகளும் அரசு கல்லூரிகளைப் போன்று மருத்துவ கல்வி இயக்குனரகம் நடத்தும் தேர்வுகளில் கலந்துகொண்டுதான் தேர்ச்சி பெறுகிறார்கள். இரண்டு பேருக்கும் இந்த இயக்குனரகம்தான் தேர்ச்சி சான்றிதழ் வழங்குகிறது.

ஆனால், அரசு வேலை வாய்ப்பு என்று வரும்போது தனியார் கல்லூரிகளில் படித்தவர்களுக்கு நர்சு வேலை வழங்கப்படுவது இல்லை. அரசு கல்லூரிகளில் படித்தவர்களுக்கு அரசு மருத்துவமனைகளில் நர்சு பணி வழங்குவது போல தங்களுக்கும் அரசு பணி வழங்க வேண்டும் என்று தனியார் நர்சிங் கல்லூரிகள் மற்றும் நர்சிங் பள்ளிகளில் படித்த மாணவ-மாணவிகள் அரசுக்கு தொடர்ந்து வேண்டுகோள் விடுத்து வந்தனர்.

**அரசு மருத்துவமனைகளில் வேலை**

அரசு கல்லூரிகளில் படித்தவர்களுக்கு வேலை வழங்கும் போது அரசு அங்கீகாரம் பெற்ற தனியார் கல்லூரிகளில் படித்தவர்களுக்கு வேலை வழங்கப்படாதது இந்திய அரசியல் சாசனத்திற்கு விரோதமானது என்று அரசு கருதுகிறது.

எனவே, வரும் காலத்தில் அரசு மருத்துவமனைகள் மற்றும் அரசு மருத்துவ நிறுவனங்களில் நர்சு காலி இடங்கள் வரும்போது அந்த இடங்களில், அரசு மற்றும் தனியார் கல்லூரிகளில் நர்சிங் படித்து முடித்தவர்களைக் கொண்டும் நிரப்புவது என்று அரசு முடிவு செய்துள்ளது. இரு தரப்பினரும் புதிதாக அமைக்கப்பட்டுள்ள மருத்துவ பணிகள் தேர்வு வாரியம் மூலமாக தேர்வு நடத்தப்பட்டு பணிக்கு தேர்வு செய்யப்படுவார்கள்.

இவ்வாறு அந்த உத்தரவில் கூறப்பட்டு உள்ளது.

# இந்தியாவிலேயே முதன் முறையாக மருத்துவம் சார்ந்த அரசு துறைகளுக்கு பணி நியமனம் விரைவாக செய்திட மருத்துவ சேவை பணி தேர்வு வாரியம் அமைத்து தமிழக அரசு வெளியிட்ட அரசு ஆணை

**ABSTRACT**

Tamil Nadu Medical Service – Constitution of 'Medical Services Recruitment Board' exclusively for Health and Family Welfare Department – Orders – Issued.

---

HEALTH AND FAMILY WELFARE (C2) DEPARTMENT

G.O.(Ms) No.1

Dated 02.01.2012
Thiruvalluvar Andu-2042,
Margazhi-17.

Read:-

1. From the Director of Medical and Rural Health Services, Letter No.38800/P&D-II/3/2011, dated 24.06.2011.
2. G.O.(Ms).No.328, Health and Family Welfare Department, dated 08.10.2009.
3. G.O.(Ms).No.22, Health and Family Welfare Department, dated 29.01.2010.

--:oOo:--

**ORDER:**

The Health and Family Welfare Department consists of more number of directorates under its control. Now appointment to various categories is being made by different modes of appointment. In the case of Direct Recruitment in Medical and Para Medical or Non-Medical category, the appcintment is made either through Tamil Nadu Public Service Commission or through Employment Exchange. For a very long time, the Government have found it difficult to make appointments in a speedy manner, which affects the public especially the poor patients who approach the Government Hospital for treatment. Further medical services are essential services and keeping the posts vacant for a long time is not desirable in public interest. Therefore it is considered necessary to centralize the mode of direct recruitment by constituting a separate Recruitment Board for the Health and Family Welfare Department on the lines of the Teachers Recruitment Board.

2. At present, the doctors in Assistant Surgeon cadre are being recruited through Tamil Nadu Public Service Commission. In the case of Para Medical category like Pharmacist and Laboratory Technician Grade II, a State wide Employment Exchange Seniority is being followed as in the case of Secondary Grade Teachers and accordingly orders were issued in Government Orders 2nd and 3rd read above. In respect of other Para-Medical and other basic service category, direct recruitment is being made by respective Head of Departments / Appointing Authorities through Employment Exchange duly following the rule of reservation.

# செய்தி குறிப்பு

## பத்திரிக்கையாளர் சந்திப்பு




தனியார் நர்சிங் கல்லூரி மற்றும் பள்ளியில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு அரசு மருத்துவமனைகளில் வேலை வாய்ப்பு வழங்கி ஆணை பிறப்பித்த தமிழக அரசுக்கு நன்றி தெரிவிக்கும்வகையில் பத்திரிக்கையாளர் சந்திப்பு சென்னையில் 31.01.2012 அன்று நடைபெற்றது. இதில் சங்கத்தின் தலைவர் R.விவேகானந்தன், செயலாளர் A.குணசிங், ஒருங்கினைப்பாளர் திரு S.சிதம்பரம், பொருளாளர் N.யோகானந்தசிவம் மற்றும் சங்க உறுப்பினர் Dr. பாலாஜி ஆகியோர் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு அரசு அங்கீகாரம் பெற்ற தனியார் நர்சிங் கல்லூரி மற்றும் பள்ளிகளின் அசோசியேசன் கூட்டம் 30.01.2012 திங்கள்கிழமை காலை 10.00 மணி அளவில் சென்னை, எக்மோர்ரில் உள்ள ஹோட்டல் சந்திரா பார்க்கில் தலைவர் விவோகானந்தன் தலைமையில் நடைபெற்றது.

விழாவில் அசோசியேசன் செயலாளர் குணசிங், ஒருங்கிணைப்பாளர் சிதம்பரம், பொருளாளர் யோகானந்தசிவம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**1. மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சி தலைவி அம்மா அவர்களுக்கு கோடான கோடி நன்றிகள்.**

எங்களின் 30 ஆண்டு கோரிக்கையான தனியார் நர்சிங் கல்லூரி மற்றும் பள்ளியில் பயிலும், மாணவ, மாணவிகளுக்கு அரசு மருத்துவமனைகளில் வேலைவாய்ப்பு வழங்கி ஆணை பிறப்பித்த தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்கு எங்கள் சங்கத்தின் கோடான கோடி நன்றிகளை தெரிவித்துக் கொள்வது என்ற தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

2. நேர்மையான அரசாணை மற்றும் இந்திய அரசியலமைப்பு சட்டத்திற்கு எதிராக போராடும் அரசு நர்சிங் கல்லூரி மற்றும் பள்ளியில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்க வேண்டுகோள்.

இந்தியா முழுவதும் தமிழகம் உட்பட அரசு வேலைவாய்ப்பு என்பது தனியார் கல்லூரியில் பயின்றாலும், அரசு கல்லூரிகளில் பயின்றாலும் இரண்டையும் சமமாக கருதி, ஆசிரியர் பணி, இன்ஜினியர் பணி, மருத்துவர் பணி, குமாஸ்தா, பிட்டர், எலக்ட்ரீசியன் என அனைத்து விதமான பணியிடங்களுக்கும், தேர்வு செய்யப்பட்டு பணியில் அமர்த்தப்படுகிறார்கள்.

ஆனால் தமிழகத்தில் மட்டும் குறிப்பாக செவிலியர் பணியில் மட்டும் அரசு நடத்தும் நர்சிங் கல்லூரி மற்றும் பள்ளியில் பயிலும் மாணவ மாணவிகளுக்கு மட்டும் அரசு வேலை வாய்ப்பினை வழங்கப்பட்டு வந்தது.

தர்மத்திற்கு எதிரான இயற்கைக்கு முரணான இந்த அவல நிலையை போக்க வேண்டி உயர்நீதிமன்றம் மற்றும் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு, உச்சநீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்ற தீர்ப்புகளின் அடிப்படையில்

நமது தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சி தலைவி அம்மா அவர்கள் வரலாற்று சிறப்பு வாய்ந்த தனியார் நர்சிங் கல்லூரி மற்றும் பள்ளியில் பயின்ற மாணவ மாணவிகளுக்கும் அரசு மருத்துவமனைகளில் மருத்துவ பணி தேர்வு வாரியத்தின் மூலம் தேர்வின் அடிப்படையில் பணியில் அமர்த்தபடுவார்கள் என்ற சிறப்பான அரசு ஆணை எண் : 29 தேதி : 18.01.2012 வழங்கி

தமிழகத்தில் 150000 த்திற்கும் மேற்ப்பட்ட தனியார் நர்சிங் கல்லூரியில் பயின்ற ஏழை, எளிய செவிலியர்களின் வாழ்வில் வசந்தத்தை ஏற்படுத்தி உள்ளார்கள்.

அதேபோல் தகுதியிலும், திறமையிலும் அரசு கல்லூரிகளில் பயின்ற நர்சிங் மாணவ மாணவிகளை விட எந்த விதத்திலும் தனியார் கல்லூரியில் படித்தவர்கள் தரம் தாழ்ந்தவர் அல்ல.

தர்மத்திற்கு எதிராகவும், இயற்கைக்கு முரணாகவும், இந்திய அரசியல் அமைப்பு சட்டம் விதி 16(1)க்கு எதிராகவும், நேர்மையான அரசு ஆணைக்கு எதிராகவும் போராட்டம் நடத்தும் அரசு நடத்தும் நர்சிங் கல்லூரி மற்றும் பள்ளியில் பயிலும் மாணவ மாணவிகளின் பேரில் தகுந்த நடவடிக்கை எடுத்து நீதியை நிலை நாட்ட தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம்.

3. தமிழகத்தில் உள்ள ஏழை எளியவர்களுக்கு தொடர்ந்து சேவை செய்திட அரசு மருத்துவமனை மற்றும் அரசு மருத்துவ கல்லூரிகளில் தனியார் செவிலியர் கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணவ மாணவிகள் நேரடி பயிற்சி பெற அரசு நிரந்தர அனுமதி வழங்க வேண்டுமாறு கேட்டுக் கொண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கூட்டத்திற்கு தமிழகத்தில் உள்ள அனைத்து தனியார் நர்சிங் கல்லூரி மற்றும் பள்ளிகளில் இருந்து திரளான அளவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

நிறைவாக திரு.யோகானந்தசிவம் அவர்கள் நன்றி கூறினார்.

## நமது சங்க உறுப்பினர்களின் ஒற்றுமையின் வெளிப்பாடு

# அரசு நர்சிங் கல்லூரி மாணவர்களுக்கு எதிர்ப்பு தனியார் மாணவர்களும் போராட்டத்தில் குதித்தனர்

திருநெல்வேலி, ஜன. 28—

தமிழகத்தில் அரசு கல்லூரி மாணவர்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து தனியார் கல்லூரி மாணவர்கள் போராட்டத்தில் இறங்கினர். இப்போராட்டம் பின்னணி குறித்து பின்னணி தகவல்கள் அம்பலமாகியுள்ளது.

தமிழகத்தில் அரசு ஆஸ்பத்திரிகள், ஆரம்ப சுகாதார நிலையங்களில் தனியார் நர்சிங் கல்லூரி மாணவிகளுக்கு அரசு வேலை வாய்ப்பு வழங்கப்படாத சூழ்நிலை இருந்தது. அரசு நர்சிங் கல்லூரி மாணவிகள் மட்டுமே இந்த வேலைவாய்ப்பை பெற்று வந்தனர்.

இந்நிலையில் சமீபத்தில் தனியார் நர்சிங் கல்லூரி மாணவிகளுக்கு அரசு வேலைவாய்ப்பு வழங்கப்படும் என்று அரசாணை பிறப்பிக்கப்பட்டது. மேலும், மருத்துவ துறையில் பல்வேறு பணியிடங்கள் எழுத்து தேர்வு மூலம் நிரப்பபடும் என்றும், இதற்கென தனி வாரியம் அமைக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

அரசின் இந்த அறிவிப்புக்கு அரசு நர்சிங் கல்லூரி மாணவ, மாணவிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். இதுதொடர்பாக பல்வேறு போராட்டங்களையும் நடத்துகின்றனர்.

இதற்கிடையில் அரசு நர்சிங் கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு போட்டியாக தற்போது தனியார் நர்சிங் கல்லூரி மாணவ,

**★ போராட்ட பின்னணி 'அம்பலம்'**



அரசு நர்சிங் கல்லூரி மாணவர்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து நெல்லையில் தனியார் நர்சிங் கல்லூரி மாணவிகள் முற்றுகையிட்டனர்.

மாணவிகள் களத்தில் குதித்துள்ளனர். தனியார் கல்லூரிகளில் படிப்பவர்களுக்கு அரசு வேலை வாய்ப்பு வழங்க கூடாது என்று தெரிவிக்கும் அரசு நர்சிங் கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு இவர்கள் கடும் எதிர்ப்பு தெரிவிக்கின்றனர்.

நெல்லை மாவட்டத்தை பொறுத்தவரை பாளைடக்கரம்மாள்புரம், வள்ளியூர், காவல்கிணறு, ஆலங்குளம், வீ.கே புதுார், சங்கரன்கோவில் பருவக்குடி, சேரன்மகாதேவி, இடையன்குடி ஆகிய 8 இடங்களில் உள்ள தனியார் நர்சிங் கல்லூரி மாணவ, மாணவிகள் நெல்லை கலெக்டர் அலுவலகத்தை முற்றுகையிட்டனர். தொடர்ந்து அங்கு பாளை போலீஸ் இன்ஸ்பெக்டர் பிரான்சிஸ் தலைமையில் போலீசாரும் குவிக்கப்பட்டனர்.

இப்போராட்டம் தொடர்பாக மாணவிகள் சிலர் கூறியதாவது:

தனியார் நர்சிங் கல்லூரிகளில் படித்தாலும் அரசு வேலைவாய்ப்பு வழங்கப்படும் என்று அரசு அறிவித்துள்ளதை வரவேற்கிறோம். ஆனால் இதற்கு அரசு நர்சிங் கல்லூரி மாணவ, மாணவிகள் எதிர்ப்பு தெரிவிப்பதை ஏற்று கொள்ள முடியாது.

நாங்களும் அவர்களை போல படித்தாலும் எங்களுக்கு அரசு வேலை வாய்ப்பு கிடைக்காத சூழ்நிலை இருந்தது. இதனால் தனியார் ஆஸ்பத்திரிகளில் குறைந்த சம்பளத்திற்கு பணி செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. ஆனால் அரசின் புதிய அறிவிப்பின் மூலம் நாங்களும் அரசு வேலைக்கு வர வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இதற்காக தனியாக எழுத்து தேர்வு நடத்துவதால் திறமையானவர்கள் அரசு வேலைவாய்ப்புக்கு வர வாய்ப்பு உள்ளது. எனவே, அரசு இந்த அறிவிப்பை திரும்ப பெறாமல் உடனடியாக எழுத்து தேர்வு நடத்தி தனியார் நர்சிங் கல்லூரி மாணவிகளையும் அரசு வேலைவாய்ப்புக்கு தேர்வு செய்ய வேண்டும்.

இவ்வாறு மாணவிகள் தெரிவித்தனர்.

**போராட்ட பின்னணி**

தனியார் நர்சிங் கல்லூரி மாணவிகளுக்கு அரசு வேலைவாய்ப்பு வழங்கப்படும் என்ற அரசாணை ஆளுங்கட்சியின் வி.ஐ.பியின் தீவிர முயற்சியால் கிடைத்ததாக கூறப்படுகிறது. இதற்காக தமிழகத்தில் உள்ள அனைத்து தனியார் கல்லூரிகளின் 'ஆதரவை'யும் பெற்றதாகவும் கூறப்படுகிறது.

தற்போது அரசு நர்சிங் கல்லூரி மாணவ, மாணவிகள் தீவிர போராட்டம் நடத்தி வரும் சூழ்நிலையில் இப்போராட்டத்தை முறியடிக்கவும், இதற்கு போட்டியாக அனைத்து மாவட்டங்களிலும் போராட்டம் நடத்தவும் தனியார் நர்சிங் கல்லூரி மாணவ, மாணவிகள் களத்தில் இறக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

# தனியார் நர்சிங் மாணவிகள் மனு



தனியார் நர்சிங் கல்லூரியில் படித்தவர்களுக்கு அரசு வேலை வழங்கும் உத்தரவை உடனே அமல்படுத்த கோரி தனியார் நர்சிங் கல்லூரி மாணவிகள் நெல்லை கலெக்டரிடம் இன்று மனு கொடுத்தனர்.

# அரசின் உத்தரவை எதிர்ப்பவர்கள் மீது கடும் நடவடிக்கை: தனியார் நர்ஸிங் மாணவர் புகார்

**கரூர்:** 'அரசு உத்தரவை எதிர்க்கும் அரசு நர்ஸிங் கல்லூரி மாணவ, மாணவிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்' என, கரூர் மாவட்ட கலெக்டர்அலுவலகத்தில் தனியார் நர்ஸிங் கல்லூரியைசேர்ந்த மாணவ, மாணவிகள் நேற்று மனு அளித்தனர்.

தமிழகத்தில் செயல்பட்டு வரும் அரசு அங்கீகாரம் பெற்ற தனியார் நர்ஸிங் கல்லூரியில் படித்து வரும் மாணவ, மாணவிகளுக்கு அரசு மருத்துவமனைகளில் மருத்துவ பணித்தேர்வு வாரியத்தின் மூலம், தேர்வின் அடிப்படையில் பணியில் அமர்த்தப்படுவார்கள் என, தமிழகஅரசு கடந்த 19ம் தேதி அறிவித்தது. அரசு உத்தரவை எதிர்த்துமாநிலம் முழுவதும் அரசு நர்ஸிங் கல்லூரி மாணவ, மாணவிகள் பே ாராட்டம் நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில் கரூர் மாவட்டத்தில் செயல்பட்டு வரும் சக் தி நர்ஸிங் கல்லூரி, ஸ்ரீ அரபிந் தோ நர்ஸிங் தனியார் கல்லூரியைச் சேர்ந்த 100க்கும் மேற்பட்ட மாணவிகள், தமிழக அரசின் உத்தரவை எதிர்த்து, இந்திய அரசியல் சட்டத்துக்கு எதிராக போராட்டம் நடத்தி வரும் அரசு நர்ஸிங் கல்லூரி மாணவ, மாணவிகள் மீது நடவடிக்கை எடுக்ககோரி புகார் மனு அளிக்க, கரூர் கலெக்டர் அலுவலகத்துக்கு நேற்று மதியம் ஒரு மணிக்கு கொடுக்க வந்தனர். அப்போது கலெக்டர் ஷோபனா வெளியூர் சென்று விட்டதால், பணியில் இருந்த அதிகாரியிடம் தனியார் நர்ஸிங் கல்லூரி மாணவ, மாணவிகள் மனு கொடுத்தனர்.

**இதுகுறித்து தனியார் நர்ஸிங் கல்லூரி மாணவ, மாணவிகள் கூறியதாவது:** தமிழகத்தில் இதுவரை அரசு நர்ஸிங் கல்லூரியில் படித்தவர்களுக்கு மட்டும் அரசு மருத்துவமனையில் வேலை வழங்கப்பட்டு வந்தது.

உச்சநீதிமன்றம், உயர்நீதிமன்ற தீர்ப்புகளின் அடிப்படையில் தமிழக முதல்வர் ஜெயலலிதா, தனியார் நர்ஸிங் கல்லூரி மாணவ, மாணவிகளும் அரசு வேலையில் தேர்வு மூலம் சேரலாம் என அறிவித்துள்ளார். தமிழக முதல்வரின் இந்த அறிவிப்பால் மாநிலம் முழுவதும் சுமார் 75,000 பேர் பயன் பெறுவர்.

அரசு நர்ஸிங் கல்லூரியில் படிப்பவர்களுக்கும், எங்களுக்கும் ஒரே மாதிரிதான் தேர்வு நடத்தப்படுகிறது. அரசு நர்ஸிங் கல்லூரி மாணவர்களுக்கு எந்த வகையிலும் நாங்கள் சளைத்தவர்கள் அல்ல. எனவே தமிழக அரசின் உத்தரவை எதிர்த்து போராட்டம் நடத்தும் அரசு நர்ஸிங் கல்லூரி மாணவ, மாணவிகள் மீது நடவடிக்கை எடுக்க் வேண்டும்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

**குளித்தலையில் அரசு நர்சுகள் ஆர்ப்பாட்டம்:** அரசு மருத்துவமனைகளில் தனியார் நர்ஸிங் கல்லூரி மாணவர்களுக்கு வேலை வழங்க கூடிய வகையில் வெளியிடப்பட்ட அரசு உத்தரவை திரும்பக்பெறக்கோரி, குளித்தலை அரசு மருத்துவமனை முன்பு நர்ஸ் ராஜேஸ்வரி தலைமையில் ஆர்ப்பாட்டம் நடந்தது. அதில் அரசு ஊழியர் சங்க வட்ட செயலாளர் குமரேசன், பதிவரை எழுத்தர் நாச்சிமுத்து, நர்சுகள் சீதாலட்சுமி, மணிமேகலை, கற்பகம், உமாபதி, ஐ.சி .டி.சி., கவுன்சிலர் அமல்தாஸ் உள்பட பலர் பங்கேற்றனர்.



# செவிலியர்களின் நிலை உயர



உலக அளவில் இந்திய செவிலியர்களின் தரம் முதன்மையான நிலையில் உள்ளது. நமது நாட்டு செவிலியர்களின் பணி சிறப்பாக இருக்கின்ற காரணத்தினால் தான், நமது நாட்டில் படித்த மாணவ / மாணவிகள் ஐரோப்பா, அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற மேலை நாடுகளில் அவர்கள் தனியாக செவிலியர் சேவை புரிய அனுமதிக்கின்றனர்.

மக்கள் தொகை குறைவாக உள்ள மேலை நாடுகளில் நமது செவிலியர்கள் தனியாக செவிலியர் சேவை செய்ய அனுமதி வழங்கும் பொழுது, மக்கள் தொகையில் உலக அளவில் தற்பொழுது இரண்டாவது இடத்திலும் விரைவில் முதல் இடத்திற்கு வர உள்ள நமது இந்திய தேசத்தில்,

கிராமபுற மற்றும் மலை பகுதி மக்கள் மற்றும் ஏழை, எளிய நடுத்தர மக்கள் இதுவரை எளிதான முழுமையான மருத்துவ ஆலோசனை மற்றும் மருத்துவ சேவைகளை பெற இயலாத நிலையில் வாழ்ந்து கொண்டு இருக்கின்றனர்.

நமது நாட்டு மாணவ / மாணவிகள் மருத்துவ படிப்பு படிப்பதற்காக நமது நாடு கோடிக்கணக்கான தொகையினை செலவழித்து மருத்துவர்களாக உருவாக்குகின்றனர். ஆனால் படித்து முடித்த மருத்துவர்கள் நகர்புறங்களில் பணி செய்யவும், வெளிநாடுகளுக்கு சென்று பணி செய்யவுமே விரும்புகின்றனர்.

இந்த சூழ்நிலையில் மருத்துவ படிப்பிற்கு அடுத்த படியாக 4 ஆண்டுகள் ஏறக்குறைய மருத்துவர்களுக்கான பாடத்திட்டங்களை படிக்கும் செவிலியர்களை, குறிப்பிட்ட வியாதிகளுக்கு தனியாக செவிலியர் சேவை புரிய அனுமதிக்கும் பட்சத்தில் நமது நாட்டில் மருத்துவ சேவை மற்றும் சுகாதார விழிப்புணர்வு அதிகரிக்கும் என்பது நிச்சயம் அதோடு, மருத்துவமனைகளில் இரண்டொரு ஆண்டுகள் கம்பவுண்டர்களாக பணிபுரிந்தவர்கள் கிராமப் புற பகுதிகளில் போலி மருத்துவர்களாக வைத்தியம் பார்ப்பது குறைந்துவிடும் என்பதும் நிதர்சனமான உண்மை.

மேலும் இவ்வாறு செவிலியர்களை குறிப்பிட்ட வியாதிகளுக்கு தனியாக செவிலியர் சேவை பார்க்க அனுமதிக்கும் பொழுது நமது செவிலியர்களின் சமூக அந்தஸ்து உயரும் என்பது கண்கூடாகும். இதனால் புதிதாக ஏராளமான அளவில் மாணவ / மாணவிகளை செவிலியர் படிப்பினை படிப்பதற்கு ஆர்வமாக முன்வருவார்கள். இதனால் செவிலியர் கல்லூரிகளின் வளர்ச்சியும் மேன்மையடையும். எனவே நாம் அனைவரும் நமது இந்திய அரசினை அனுகி செவிலியர்கள் தனியாக செவிலியர் சேவை செய்ய அனுமதிக்கும் வகையில் சட்ட மசோதவை நிறைவேற்ற பாடுபட முன்வருவோம்.

# INC LATEST REGULATIONS

*Fax No. 23236140*
Phone Nos. 23235570, 23235619

**INDIAN NURSING COUNCIL**
**COMBINED COUNCILS BUILDING**
**KOTLA ROAD, TEMPLE LANE**
**NEW DELHI – 110 002**

-3 JAN 2012

File No. 1-5(GB)Cir/2011 Date: ______________

To,
The Principal,
School/College of Nursing

**Subject: Various regulations and policy decision of INC: Reg.**

Sir/Madam,

Indian Nursing Council has resolved various nursing educational policies / regulations to be followed by each School/ College of Nursing in order to ensure uniformity for nursing education of India under section 16 of INC Act 1947.

Therefore these policies /regulations / guidelines prevails over the regulations/ policies in the syllabi. For example the admission criteria has been enhanced for ANM, i.e., from 10th to 12th standard from 2012-2013 academic year and for General Nursing and Midwifery (GNM) the Admission criteria will be 10+2 with science with minimum 40% marks.

While implementing nursing programme these regulation may be implemented otherwise INC will not be able to recognize the institution/ course run by your School/College

From next year onwards the validity will be linked with the Website that is for the institution does not submit application form as desired their names will not be put on website.

Yours faithfully

Sandhya Gupta

**Dr. Sandhya Gupta**
**SECRETARY**

# நமது சங்கத்தின் சாதனைகள்

**Due to the continued effort of the TNRNSC Association the following Land Mark Achievements are achieved.**

- » The First and the foremost achievement is to get from the Madurai High Court the Historical Judgment that enables to get equal job opportunity for private Nursing Students in Government Hospitals
- » Got approval of Management Quota in B.Sc., Nursing admissions for the year 2010-2011, Yielding a saving of Rs.60,000/- per institution.
- » Succeeded in reducing the Tamilnadu Dr.M.G.R Medical University Security Deposit from Ten Lakhs to Five Lakhs.
- » Reduced the Eligibility Criteria from 45 to 40 % for admission to B.Sc., Nursing course.
- » Succeeded in relaxing the eligibility criteria for admission to Diploma Nursing as Any Group in +2 Course.
- » Succeeded in abolishing the Break System for B.Sc., Nursing Course up to Third Year.
- » Succeeded in relaxing the rule enabling nursing faculties to undertake paper valuation work instead of MD or MS Doctors.
- » Government of Tamilnadu Issued G.O. (Ms) No. 29 Date : 18.01.2012 for job Opportunity to private nursing college / school students.
- » Due to our continuous and hard work the Tamilnadu Dr. M.G.R. Medical University considered to reduce the Principal Experience from 10 years to 5 years.
- » Due to our continuous approach to the Vice-Chancellor, the University relaxes the Inspection Once in Three Years for Seven Years Old Colleges.
- » Due to our continuous and hard work the Tamilnadu Dr. M.G.R. Medical University give the affiliation for P.B.Sc., Nursing with out Government Order.

# சன் டிவி விவாத மேடை நிகழ்ச்சி



தமிழகத்தில் அரசு செவிலியர் கல்வி நிறுவனங்களில் படிக்கும் மாணவ மாணவிகள், தனியார் செவிலியர் கல்வி நிறுவனங்களில் படித்த மாணவ, மாணவிகளுக்கு அரசு வேலைவாய்ப்பு வழங்கக்கூடாது என்று தமிழகம் முழுவதும் போராட்டம் நடத்தினர்.

அப்பொழுது, செவிலியர்களின் போராட்டம் நியாயமா ? என்ற தலைப்பில் சன் டிவி குழுமத்தின் ஓர் அங்கமான சன் நியூஸ் சேனலில் 05.02.2012 இரவு 9.00 மணிமுதல் 10.00 மணி வரையிலும் 06.02.2012 காலை 6.30 மணி முதல் 7.30 மணி வரையில் ஒளிபரப்பு செய்தார்கள்.

விவாத மேடை நிகழ்ச்சியில் நமது சங்கத்தின் சார்பில் சங்க ஒருங்கிணைப்பாளர் திரு. எஸ்.சிதம்பரம் அவர்கள் கலந்துகொண்டு நமது சங்கத்தின் சார்பாக கீழ்க்கண்ட விபரங்களை ஆணித்தரமாக எடுத்துரைத்தார்.

இந்தியாவில் தமிழகத்தில் மட்டும்தான் அரசு வேலைவாய்ப்பில் தனியார் நர்சிங் கல்லூரி மற்றும் பள்ளியில் பயிலும் மாணவ மாணவிகளுக்கு வேலைவாய்ப்பு மறுக்கப்படுகிறது.

இந்த அவலநிலையை எதிர்த்து உயர்நீதிமன்றம் மற்றும் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் அரசு வேலைவாய்ப்பு வழங்கியுள்ளனர்.

தர்மத்திற்கு எதிராக இயற்கைக்கு முரணாக கடந்த 30 ஆண்டுகளாக அரசு பள்ளிகளில் படித்த மாணவ மாணவிகளுக்கு மட்டும் அரசு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டது.

எனவே வருகின்ற 30 வருடங்களுக்கு தனியார் கல்வி நிறுவனத்தில் படித்தவர்களுக்கு மட்டுமே அரசு வேலை வழங்கவேண்டும்.

அரசு பள்ளிகளில் படிப்பில் சேர்ந்த உடனே அரசு வேலை உறுதி என்ற நிலை உள்ளதால், மாணவ, மாணவிகள் படிப்பில் சேர்ந்த உடனே அரசு ஊழியர் என்ற மனநிலைக்கு வந்துவிடுகின்றனர். இதனால் நன்றாக படித்தாலும் படிக்காவிட்டாலும் அரசு வேலை நிச்சயம் என்பதால் படிப்பில் ஆர்வமாக படிப்பதில்லை.

அதே சமயம் தனியார் கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணவ, மாணவிகள் பெரிய மருத்துமனைக்கு போக வேண்டும், வெளிநாட்டில் பணிபுரிய வேண்டும் என்றால் பயிற்சி தரமானதாக இருந்தால்தான் முடியும் என்பதால், ஆர்வமாக படிக்கின்றனர். எனவே, தரமான பயிற்சி என்பது தனியார் மாணவ – மாணவிகளிடம் தான் உள்ளது.

அரசு பள்ளியில் படிக்கும் மாணவ மாணவிகள் எந்த அளவிற்கு ஏழ்மையானவர்களோ அதே அளவிற்கு ஏழ்மையானவர்கள்தான் தனியார் கல்வி நிறுவனங்களிலும் படிக்கின்றார்கள்.

நமது தமிழ்நாடடில் படித்த செவிலியர்களுக்கு இந்திய ராணுவம், இரயில்வே போன்ற இந்திய அரசு நிறுவனங்களிலும், நமது பக்கத்து மாநிலமான கேரளா மற்றும் கர்நாடகாவில் அரசு பணி வழங்கப்படுகிறது.

குறிப்பாக நமது தமிழகத்தில் படித்த மாணவ மாணவிகளுக்கு அமெரிக்கா, இங்கிலாந்து, ஐரோப்பா போன்ற நாடுகளில் அரசு மருத்துவமனைகளில் பணி வழங்கும்பொழுது படிப்பு சொல்லிக்கொடுத்த தமிழக அரசின் மருத்துவமனைகளில் ஏன் வாய்ப்பு வழங்க கூடாது?

தகுதி வாய்ந்த ஒவ்வொரு இந்திய குடிமகனும் அரசு வேலைவாய்ப்பு கேட்க இந்திய அரசியல் அமைப்பு சட்டம் எண்.16(1) படி உரிமையுள்ளது. எனவே, தனியார் கல்வி நிறுவனங்களில் படித்த மாணவ மாணவிகளுக்கு அரசு வேலைவாய்ப்பு வழங்க வேண்டும்.

நமது கருத்துகளுக்கு தமிழகம் முழுவதும் நல்ல வரவேற்பு இருந்தது குறிப்பிடத்தக்கது.

# தனி பல்கலைக் கழகம்



தமிழகத்தில் 150 நர்சிங் கல்லூரிகள் இயங்கி வருகின்றது. ஆனால் நர்சிங் கல்லூரிகளுக்கென தனியாக பல்கலைக்கழகம் இதுவரை இல்லை.

தமிழகத்தில் 4 கல்லூரிகள் மட்டுமே உள்ள விளையாட்டு கல்விக்கு தனியாக பல்கலைக்கழகம் உள்ளது. அதுபோல 2 கல்லூரிகள் மட்டுமே உள்ள தோட்டக்கலை துறைக்கு தனியாக பல்கலைக் கழகம் உள்ளது.

இந்நிலையில் நர்சிங் கல்லூரிகளுக்காக தனியாக தமிழ்நாட்டில் பல்கலைக் கழகம் அமையுமேயானால், இந்த பல்கலைக்கழகம் தான் இந்தியாவிலே செவிலியர்களுக்கான முதல் பல்கலைக் கழகமாக விளங்கும்.

இந்த பல்கலைக்கழகம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா பெயரில் இயங்கினால் மிகவும் சிறப்பாக இருக்கும்.

# நவீன யுகத்தில் ஓர் கற்காலம் !

தமிழகத்தில் ஒரு வருட பட்டயப்படிப்பு படிக்கின்ற எலக்ட்ரீசியன், வெல்டர், பிட்டர், போன்ற மாணவ / மாணவிகளுக்கு படிப்பு முடிந்தவுடன் நவீன முறையில் கம்யூட்டர் சான்றிதழ்கள் போட்டோவுடன் அழகிய வடிவத்தில் வழங்கப்படுகிறது. ஆனால் 3½ ஆண்டுகள் படிக்கின்ற GNM மாணவிகளுக்கு படிப்பு முடித்து 1 வருடம் கழித்து தான் கற்காலத்தில் வழங்கப்பட்ட சான்றிதழ்கள் வழங்கப்படுகிறது.

இதனால் வெளிநாடுகளில் வேலை வாய்ப்புக்கு செல்லும் பொழுது இந்த சான்றிதழ்களை வெளிநாட்டு நிறுவனங்கள் ஏற்க மறுக்கின்றனர். அதே போல் ஒவ்வொரு மாணவிகளுக்கும் தனித்தனியாக மதிப்பெண் பட்டியல் வழங்கப்படுவதில்லை.

ஒவ்வொரு மாணவிக்கும் தனித்தனியாக மதிப்பெண் பட்டியல் வழங்க வேண்டும். நாம் பலமுறை முறையிட்டும் இதுவரை பலன் இல்லை. எனவே நாம் நமது தமிழக அரசை தொடர்ந்து வலியுறுத்துவோம்.

## தமிழக முதலமைச்சரின் பொது நிவாரான நிதி ரூபாய் 10,000 /- நன்கொடை வழங்கிய நமது சங்க உறுப்பினர்களின் விபரம்

| Sl.No | Name of the Member's Institution | Address |
|---|---|---|
| 01 | Anbu College of Nursing | M.G.R. Nagar, Pallipalayam, Komarapalayam, 638 183. |
| 02 | Annai Dora College of Nursing | No.93, Bazzar Street, Aundipatty - 625 512 |
| 03 | Christian College of Nursing | Neyyoor (P.o) K.K District - 629 802. |
| 04 | Kovai Kongunadu College of Nursing | No.64, 11th Street, Tatabad, Coimbatore, 641012. |
| 05 | Nehru College of Nursing, Tirunelveli. | Thiruchendur Road, Vallioor, Tirunelveli (D.t) pin. 627117. |
| 06 | Om Sakthi College of Nursing | Om Sakthi Hospital, No.4 Senkodi Puram, Dharmapuri. 636 809. |
| 07 | Sakthi College of Nursing, Karur | Aachimangalam, Thanthonimalai (P.o) Karur - 05. |
| 08 | Servite College of Nursing | Manikandam (P.o) Trichy - 620 012. |
| 09 | Shiv Parvathi Mandradiar Institute of Health Sciences | Palayakottai (P.o) Nathakadaiyur (Via) Kankeyam Main Road, Tirupur (D.t) |
| 10 | Sree Abirami College of Nursing | No.33 Madukarai Road, Sundarapuram, Coimbatore - 641 024. |
| 11 | Sri Aurobindo College of Nursing | H63, TNHB Colony, Gandhigramam, Karur. |
| 12 | Sri K.Ramachandran Naidu College of Nursing | K.R.Naidu Nagar, Paruvakudi, Karivalam (Via) Sankarankoil (T.k) Tirunelveli (D.t) 627 753. |
| 13 | Sri Vijay Vidyalaya College of Nursing | D.N.C Compound, Gandhinagar, Dharmapuri - 01. |
| 14 | P.S.College of Nursing | Thalakulam via, Neyoor, K.K. District - 629802. |
| 15 | Shri Bharani College of Nursing | Old Tharamangalam, Main Road, Salem. |
| 16 | Ithaya Jythoi College of Nursing | Palayamkottai. |

| Sl.No | Name of the Member's Institution | Address |
|---|---|---|
| 17 | Thanthai Roever College of Nursing | Roever Campus, Perambalur. 621 212. |
| 18 | St.Xavier's Catholic College of Nursing | Chunkankakadai, Aloor (Post) Nagercoil, K.K Dist. 629 807. |
| 19 | Thiravium College of Nursing | Kallasapatty, Periyakulam, Theni (D.t) |
| 20 | Vellalar College of Nursing | Maruthi Nagar, Thindal, Erode 638012. |
| 21 | Vignesh Nursing College | No.131, Manalurpet Road, Kizhanaikarai, Thiruvannamalai - 606 603. |
| 22 | St.Xavier College of Nursing | Needamangalam Main Road, Sakkottai, Kumbakonam (T.k) |
| 23 | Dr. Kumaraswami Health Centre Nursing Inst. (Indian Medical Centre ) | Perumalpuram, Kottaram Post, K.K D.t |
| 24 | Nehru College of Nursing | 15, N.M.K Colony Main Road, TVS Tollgate, Trichy. |
| 25 | Arcot Sri Mahalakshmi Womens College Of Nursing | Arcot-arni Main Road, Villapakkam Vellore District,Tamil Nadu-632521 |
| 26 | Sree Sastha College of Nursing | Chennai Banglore High Way, Chembarambakkam - 600 123. |
| 27 | St. Theresa of Child Jesus School of Nursing | St. Thomas Mount, Chennai. |
| 28 | St. Lukes College of Nursing | Nazareth, Tuticorin. |
| 29 | Vee Care College of Nursing | Chennai. |
| 30 | Bose School of Nursing | Madurai. |
| 31 | Crescent yousuf Zulaith School of Nursing | Madurai. |
| 32 | DNV School of Nursing | Dharmapuri. |
| 33 | Swami Vivekananda College of Nursing | Dharmapuri. |
| 34 | Indira College of Nursing | Pandur, Thiruvallur (Dt.) |
| 35 | Aravinth College of Nursing | Namakkal. |

* 05.04.2012 வரை நன்கொடை வழங்கியவர்கள்

# எச்சரிக்கை

சுயநிதி தனியார் செவிலியர் கல்லூரிகள் அனைத்தும் (சிறுபான்மையினர் கல்லூரிகள் உட்பட) நிர்வாக ஒதுக்கீட்டில் மாணவ / மாணவிகள் சேர்க்கையை கண்டிப்பாக வருகின்ற கல்வியாண்டில் 2012-2013ல் கண்காணிப்பு குழுவின் (Monitoring Committee) ஒப்புதலுடன் தான் சேர்க்க வேண்டும் என்பதை தெளிவாக தெரிவித்துக்கொள்கிறோம்.

அடிப்படைக் காரணம் :

அதிக மதிப்பெண் எடுத்த மாணவர்களுக்கு நிர்வாக ஒதுக்கீட்டில் சேர்க்கை மறுக்கப்பட்டு, குறைவாக மதிப்பெண் எடுத்த மாணவர்களுக்கு நிர்வாக ஒதுக்கீட்டில் நன்கொடை பெற்றுக்கொண்டு சேர்க்கை நடைபெறுகிறது என்று மாணவர் ஒருவரால் டெல்லி உச்ச நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில் உச்ச நீதிமன்றம் சிறுபான்மையினர் உட்பட அனைத்து சுயநிதி கல்லூரிகளும் நிர்வாக ஒதுகீட்டில் மாணவ / மாணவியர் சேர்க்கையை நுழைவு தேர்வு மற்றும் மதிப்பெண்கள் அடிப்படையில் தான் செய்ய வேண்டும் என்று தெளிவாக உத்தரவிட்டு உள்ளது.

உச்ச நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் சென்னை அண்ணா பல்கலைக்கழக குடியிருப்பு வளாகத்தில் கதவு எண் : F1 DOTE Staff Quarters, Gandhi Mandapam Road, Guindy, Chennai - 25. கட்டிடத்தில் Monitoring Committee அலுவலகம் செயல்படுகிறது. நடப்பு வருடத்தில் இருந்து உயர்நீதி மன்ற முன்னாள் நீதியரசர் அகமது ஹாதி அவர்கள் தலைமையில் கண்காணிப்பு குழு செயல்பட்டு வருகிறது.

இக்குழுவில் தமிழக அரசு மக்கள் நல்வாழ்வு துறை முதன்மை செயலாளர், தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவ பல்கலைக்கழக துணை வேந்தர், மருத்துவ கல்வி இயக்குனர், கல்வியாளர்கள் இருவர் ஆகியோர் பங்கு வகிக்கின்றனர்.

இக்கண்காணிப்பு குழு (Monitoring Committee) ஒப்புதல் அளிக்கப்பட்ட பட்டியலில் உள்ள மாணவ / மாணவிகளுக்கு மட்டும் தான் நமது தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவ பல்கலைக்கழகம் பதிவு எண் வழங்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

மீண்டும் ஒருமுறை சிறுபான்மையின கல்லூரிகளுக்கும் இது பொருந்தும் என்பதை வலியுறுத்தி கூறுகின்றோம்.

மேலும் இதன் விபரங்களை அறிந்து கொள்ள கீழ்கண்டவர்களை தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

| Sl.No | Name of the District | Name of the Zone Co-Ordinators |
|---|---|---|
| 1.<br>2.<br>3. | Kanyakumari<br>Thuthukudi<br>Trinelveli` | **Fr.Dominic**<br>St.Xaviers College of Nursing,<br>Kanyakumari. Ph. 9488881212 |
| 4.<br>5.<br>6.<br>7.<br>8.<br>9. | Madurai<br>Ramanathapuram<br>Dindigul<br>Theni<br>Virudhunagar<br>Sivagangai | **Mr.Ravishankar**<br>Rass Academy College of Nursing,<br>Madurai.<br>Ph. 9443349674 |

| Sl.No | Name of the District | Name of the Zone Co-Ordinators |
|---|---|---|
| 10.<br>11.<br>12.<br>13. | Coimbatore<br>Tirupur<br>Nilgiris<br>Erode | **Mr.Yoganandasivam**<br>Siva School of Nursing, Pollachi. Ph. 9843083432<br>**Mr.Balu**<br>Sivaparvathi Mandradiar College of Nursing<br>Ph. 9486041666 |
| 14.<br>15.<br>16. | Salem<br>Namakkal<br>Karur | **Smt.Kavitha**<br>Aravind College of Nursing<br>Namakkal. Ph.9842269523 |
| 17.<br>18.<br>19.<br>20.<br>21. | Trichy<br>Thanjavur<br>Pudukottai<br>Thiruvarur<br>Nagapattinam | **Mr.Sait Mohaideen**<br>Doctors College of Nursing<br>Ph. 9750972255<br>**Smt.J.Logambal.,Ex.MLA.**<br>Indira College of Nursing, Trichy<br>Ph. 9442554622 |
| 22..<br>23.<br>24.<br>25. | Ariyalur<br>Villupuram<br>Kadalur<br>Perambalur | **Mr.Senthil Kumar**<br>ES College of Nursing<br>Villupuram. Ph. 9442527574 |
| 26.<br>27.<br>28.<br>29.<br>30. | Thiruvannamalai<br>Vellore<br>Kanjipuram<br>Thiruvallur<br>Krishnagiri | **Dr.Balaji**<br>BPR School of Nursing<br>Ph. 9443246403 |
| 31. | Chennai Zone | **Mr.Logesh**<br>Right College of Nursing<br>Ph. 9940299412 |
| 32. | Dharmapuri | **Mrs.Vasantha Rani**<br>Swami Vivekananda College of Nursing<br>Ph. 9360015292 |

## மேலும் விவரங்களுக்கு


**R. விவேகானந்தன்**
தலைவர்.
94433 83680

**S. சிதம்பரம்**
ஒருங்கிணைப்பாளர்.
98430 56440

**A. குணசிங்**
செயலாளர்.
98422 82224

# நிர்வாக ஒதுக்கீட்டில் மாணவர் சேர்க்கை குறித்து தமிழக அரசு வெளியிட்ட அறிவிப்பு

தினமலர் திருச்சி 7-2-2012 5

## சுயநிதி மருத்துவ கல்லூரி மாணவர் சேர்க்கைக்கு கண்காணிப்புக் குழு அனுமதி பெறணும்

சென்னை, பிப்.7-

கண்காணிப்பு குழு அனுமதி பெறாமல் சுயநிதி மருத்துவ கல்லூரிகள் 2012-13 கல்வி ஆண்டுக்கான மாணவர் சேர்க்கையை நடத்தக்கூடாது என்று தமிழக அரசு தெரிவித்துள்ளது.

இது குறித்து தமிழக அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பு:

தமிழகத்தில் சுயநிதி மருத்துவம், மருத்துவம் சார்ந்த சிறுபான்மை, சிறுபான்மை அல்லாத சுயநிதி கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை நேர்மையாகவும் வெளிப்படையாகவும் நடக்க ஓய்வு பெற்ற ஐகோர்ட் நீதிபதி அப்துல் ஹாதி தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. இது, சுயநிதி மருத்துவக் கல்விக்கான மாணவர் சேர்க்கையை முறைப்படுத்தவும் மற்றும் கண்காணிக்கவும் அமைக்கப்பட்டுள்ளது.

இந்தக்குழுவில் உறுப்பினர் செயலராக சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை முதன்மை செயலர் கிரிஜா வைத்தியநாதன், உறுப்பினர்களாக எம்ஜிஆர் மருத்துவ பல்கலைக்கழக துணை வேந்தர் மயில்வாகனன் நடராஜன், டாக்டர்கள் ஆனந்த் கண்ணன், எஸ்.கே.ராஜன் ஆகியோர் உள்ளனர்.

2012-13 கல்வி ஆண்டுக்கு மருத்துவம், மருத்துவம் சார்ந்த பட்டப்படிப்புகளில் (எம்பிபிஎஸ், பிடிஎஸ், நர்சிங், பி.பார்ம், பிஓடி, பிபிடி, இந்திய மருத்துவம்) தனியார் சுயநிதி நிர்வாக கல்லூரிகளுக்கு உரிய விதி முறைகள் படி மாணவர் சேர்க்கையை மேற்கொள்ள அனுமதி வழங்கவில்லை.

2012-13 கல்வி ஆண்டுக்கு தமிழகத்தில் எந்த ஒரு சுயநிதி மருத்துவம் மற்றும் மருத்துவம் சார்ந்த கல்லூரிக்கோ அல்லது உரிய சங்கத்துக்கோ மாணவர் சேர்க்கைக்கான பணியை நடத்த இதுவரை அனுமதி வழங்கப்படவில்லை. இனிமேல் தான் உரிய முறையில் அனுமதி வழங்கப்படும். எனவே, எந்த ஒரு சங்கமோ அல்லது கல்லூரியோ, தன்னிச்சையாக மருத்துவ படிப்புகளுக்கு 2012-13 கல்வி ஆண்டுக்கான மாணவர் சேர்க்கையை, குழு அனுமதி பெறாமல் மேற்கொள்ளக்கூடாது.

கல்லூரிகள் அல்லது சங்கங்கள் வழங்கும் விளம்பரங்கள், விண்ணப்பங்களில் கண்காணிப்புக் குழு அனுமதி பெற்று வழங்கப்படுகிறதா என்பதை மாணவர்களும், பெற்றோரும் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

குழு அனுமதியின்றி நடக்கும் மாணவர் சேர்க்கை செல்லாது. இந்நிலையில், திருவள்ளூர் மாவட்டம் குன்னவலம் கிராமத்தில் டி.டி மருத்துவக்கல்லூரி தன்னிச்சையாகவும், மேற்படி குழுவின் அனுமதி பெறாமலும் மாணவர் சேர்க்கைக்கான விளம்பரத்தை பிப்ரவரி 1ம்தேதி வெளியிட்டுள்ளது. இந்த கல்லூரி மேற்கொண்டுள்ள மாணவர் சேர்க்கை செல்லத்தக்கதல்ல.

மாணவர்கள், பெற்றோர் நலனை கருதி இந்த அறிக்கை வெளியிடப்படுகிறது. இவ்வாறு அரசு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

## உங்களுடன் ...

தங்களின் நல் ஆதரவுடன் வெற்றிகரமாக ஐந்தாவது இதழை வெளிக்கொண்டு வந்ததில் பெருமகிழ்ச்சிகொள்கிறோம்.

வருகின்ற இதழ்கள் சிறப்பாக இருக்க தங்களின் படைப்புகள், கருத்துகள் மற்றும் கேள்வி பதில்கள் போன்ற தொகுப்பினை ஆசிரியரின் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டுகிறோம்.

இதழில் தங்கள் கல்வி நிறுவனங்களின் விளம்பரத்தை தந்தருள வேண்டுகிறோம்.

எண்ணங்கள் எப்படியோ !

எல்லாமே அப்படித்தான் !!

எல்லாம் நிறைவாகட்டும்.

அன்புடன்

எஸ். சிதம்பரம்

எடிட்டர்.

# 3 மாதத்தில் 4 கூட்டங்கள்

தமிழகத்தில் மிகக்குறைந்த அளவில் உறுப்பினர்களுக்கான சேர்க்கை கட்டணம் பெற்றுக்கொண்டு மிகச் சிறப்பாக செயல் பட்டுக்கொண்டு இருக்கின்ற ஒரே சங்கம் நமது சங்கம்தான். நமது உறுப்பினர்களிடையே நல்லதொரு புரிதல் மற்றும் சங்கம் வளர்ச்சி பெற கடந்த 3 மாதங்களில் 4 முறை சென்னை சந்திர பார்க் ஹோட்டலில் 31.01.2012 மற்றும் தியான ஆஸ்ரமத்தில் 21.02.2012, 01.03.2012, 03.04.2012 தேதிகளில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. அதன் புகைப்பட தொகுப்பு.




















TAMILNADU RECOGNISED NURSING
SCHOOLS AND COLLEGES
ASSOCIATION (Regd).









